# தென்றலும்
# தெம்மாங்கும்

கவிஞர்
அகளங்கன்

# தென்றலும் தெம்மாங்கும்

(கவிதை)

கவிஞர் அகளங்கன்

வெளியீடு:
வவுனியா முத்தமிழ்க் கலாமன்றம்
வவுனியா

தென்றலும் தெம்மாங்கும்
(கவிதை)

கவிஞர் அகளங்கன்
பம்பைமடு, வவுனியா

ஆனி 1993

வ/முத்தமிழ்க் கலாமன்றம்
வவுனியா

உரிமை:
திருமதி பூ. தர்மராஜா B. A. (சிறப்பு)

விலை ரூபா 10 /-

அச்சுப் பதிப்பு:
நியூ வன்னி குயிக் பிரின்ரர்ஸ்
கண்டி வீதி, வவுனியா

நன்றி : திரு: க. குமாரகுலசிங்கம்
திரு. செ. சண்முகநாதன்
கவிஞர் சு. முரளீதரன்

# வெளியீட்டுப்பா

பூந்தென்றல் வீசி வர - புதுப்
புனலருவி ஆடி வரும்.
சாந்தமொடு நீர் நிலைகள் - தினம்
தாளமொடு அலை எறியும்.

மயிலாடும் சோலைகளில் - மந்தி
மரந்தாவி விளையாடும்
குயிலோசை காற்றில் வர - கொக்கு
குதித்தாடி மாடு மேய்க்கும்.

வீடுகளில் கலை தவழும் - கயல்
விழிகளிலும் கவி நெளியும்
நாடுவன்னி என்பதனை - நம்
நாகலிங்க இளைய மகன்

அகளங்கன் பாத் தமிழில் - மிக
அழகாகத் தந்துள்ளார்.
புகழோங்க அவர் ஆக்கம் - என்றும்
புவி எங்கும் நிலைக்கட்டும்

"ஆலன்"

பி. மாணிக்கவாசகம்
செயலாளர்

ச. அருளானந்தம்
தலைவர்

முத்தமிழ்க் கலாமன்றம்
வவுனியா 25-7-93

# முன்பா

கிராமத்துப் புழுதியில்
ஓடித் திரிந்து,
தடாகத்து நீரில்
ஆடிக் களித்து.
தென்றலிலே தலைதுவட்டித்
தேன்மலரின் மணம்பூசி.

மயிலையும் குயிலையும்
மனத்தில் லயித்து
வயலையும் முயலையும்
வனப்பையும் ரசித்து,

கிராமத்தில் வளர்ந்தவன்
நான் - எனக்கு..
வராமற்தான் போகுமோ கவிதை
அதனால் இது.

உதவிய எல்லா உள்ளங்களுக்கும்,

நன்றிகள்'

அன்புடன்
அகளங்கன்

# தென்றலும் தெம்மாங்கும்

## இயற்கை - அழகு

வண்டிசையே பாடலதாய்,
வயல்வரம்பே மேடையதாய்,
வானத்து முழக்கமது
வளமான தாளமதாய்
எண்டிசையும் புகழ்உழவன்
எனுந்தலைவன் தனையழைக்க,
எழில்மயில்கள் நடமாடி
எதிர்நிற்கும் வன்னிநகர்.

## குயில் - குரங்கு

குயில்என்னும் இசையரசி
கூவிக் குரலெழுப்பிப்
பயில்கின்ற பண்ணிசையைப்
பார்த்திருக்கும் மந்தியினம்,
கவியினம்தாம் என்பதனால்
கவிபாட முயன்றுதோற்கும்.

தெருவோரப் பாலையின்கீழ்
சேர்ந்திருக்கும் பிள்ளையாரை
வருவோரும் போவோரும்
வழிபட்டுப் பக்தியுடன்
தேங்காயை உடைத்திடவும்
தேடியதைப் பொறுக்குதற்குத்
தீங்கேதும் இல்லாத
சிறுகுரங்கு கூடிநிற்கும்.

## மான்

நகரத்துப் பெண்ணைவிட்டு
நகர்ந்துவிட்ட நாணமதின்,
அகரத்தைக் கூட
அசைவினிலே மான்காட்டும்.

## தேன்

பால்குடித்து வளர்ந்தவரே ...
பாரிலுண்டு, எம்போலே
தேன்குடித்து வளர்ந்தவர்கள்
தேசத்தில் எவருமுண்டோ.

## பழம்

பாலைப் பழத்தைப்
பருத்தநல்ல வீரைதரும்,
வீரைப் பழத்தை,
வீதிதனில் படர்ந்திருக்கும்
சூரைப் பழத்தை
துடரிப் பழத்தைக்,
காரை நிறமொத்த
கரம்பைப் பழத்தைக்
கரையாக்கண் ணிப்பழத்தை,
விருப்போடு பொறுக்கியுண்ணும்
வெடுக்கு நாறிப்பழத்தைப்

பண்ணைப் பழத்தை
முற்றிப் பழுத்தநல்ல
உலுவிந்தம் பழத்தை,
முரலிப் பழத்தை
உதிர்ந்து விழும்
கூளாப் பழத்தை
விளாம் பழத்தை
மகிழம் பழத்தை,
ஔவைக்கு முருகன்
அன்று கொடுத்தநல்ல
நாவற் பழத்தை
நறுவிலிப் பழத்தை
காச்சுக் கனிஞ்சிருக்கும்
ஈச்சம் பழத்தை,
பனிச்சம் பழத்தை
இப்போது நினைத்தாலும்
இனிக்கிறது நெஞ்சினிலே.

## மீன்-பால்-தயிர்-நெய்

விரால் ஜப்பான்
பொட்டியன் கணையனொடு,
கெளிறு உழுவை
குறவை ஒட்டி
பனையறி மயறி
கொக்கச்சான் கச்சல்
வாளை எனக்

குளங்களிலே மீனினங்கள்,
அயிரை சிறுமாங்கன்
அவைபொரித்துத் தின்றவர்கள்
அவரன்றோ விண்ணவர்கள்
அமுதமது உண்டவர்கள்.
தயிர் பாலைநெய்யைத்,
தரமான இறைச்சிகளைத்
தாமுண்டு வளர்ந்தவர்கள்
தரணியையே வென்றவர்கள்.

பாற்கடலைக் கலக்கிப்
பாடுபட்டுத் தாம்பெற்ற
அமுதமது உண்டவர்கள்
அமரரென்றார் புராணத்தில்.
ஊர்க்குளத்தைக் கலக்கி
ஒற்றுமையாய்க் கரப்புக்குத்தி
மீன்பிடித்து உண்டவர்கள்
அமரரென்பேன் கிராமத்தில்.

## விளையாட்டு

குளக்கரையில் நிற்குமொரு
கொழுத்த மரக்கிளையில்
ஏறிக் கிளைதாவி
எழும்பிக் குதித்துநன்றாய்,
நீரில் விளையாடி
நீச்சலிலே உடல்வேர்த்துப்
பாய்ச்சலாய் வீடுவந்து

பகல்ச்சோறு உண்டதுதான்
எங்கள் கிராமத்து
எழிலான வாழ்வாகும்.
வேட்டையும் விளையாட்டும்
வீதிகளில்' கோயில்களில்.
பாட்டையும் பாடிப்
பலவகையில் ஆடி.
இயற்கையின் அரவணைப்பில்
இனிமைகண்டு வாழ்ந்ததனால்,
எங்கள் கிராமத்தோர்
எல்லோரும் முன்னையநம்
சங்கத் தமிழர் என்பேன்,
தங்கத் தமிழர்என்பேன்.

கிட்டியடியும். கிளித்தட்டும்,
கீற்றோலை இழுப்பதுவும்,
எட்டியடி வைத்தாடும்
எட்டுக்கோடு என்பதுவும்
பிள்ளையார் பந்தும்
பாக்கடிக்கும் விளையாட்டும்
வார்ப்பாய்ச்சல், குழையெடுத்தல்,
வட்டத்துள் கெந்தியடி,
தாரிழுத்தல், கண்கட்டி,
தம்கையில் மோதிரம்.
யாரடியம்மா தாயாரே
தாயம், பாண்டியொடு
ஓயாத விளையாட்டு
உண்டெங்கள் வன்னியிலே:

## ஊஞ்சல்

புளியமரக் கொப்பினிலே
புரிமுறுக்கிக் கட்டிவைத்துப்
பெரியவர்கள் ஆட்டிவிட்ட
பெரும்ஊஞ்சல் பழம்விழுத்தும்.

## பம்பரம்

ஆனையுண்ட விளாங்கனியை
ஆசையுடன் பொறுக்கி
அங்கிருக்குந் துவாரத்தில்
அழகாய்த்தடி இறுக்கி
சேனைகளாய்ச் சிறுவரெல்லாம்
சேர்ந்தொன்றாய்க் குழுமி
சிங்கார மாயதனைச்
சிறுகையால் சுழற்றி
பம்பரங்கள் சுற்றிவிளை
யாடுவதைப் பார்த்தால்
பகலிரவு தோன்றாது
பசிதூக்கம் வாரா
அம்புவியோர் வாழ்க்கையினை
அழகாக இந்தப்
பம்பரத்தைப் போலென்றார்
படித்தவர்கள் உண்மை.

கலை

கோலாட்டம் கும்மி
கூத்துக்கள் நாடகங்கள்
காவடியும் கரகங்களும்
கம்படியும் மெய்மயக்கும்

எருது

பெருத்த ஏரிகள் கொண்ட பலவகை
எருத்து மாடுகள் எங்கும் திரியும்.
செருக்கையும் ஆணவத் திமிரையும் காட்டும்
உருத்திரன் காளை மாடுகள் வன்னியின்
அடங்காத் தன்மையைக் காட்டினும்,
-அவைகள்
உழைப்பின் உறுதியை உலகுக் குணர்த்தும்.

வயலை உழுது பலகை அடித்தும்,
வண்டி இழுத்தும்; கதிரை அடிக்கும்
செயலைச் செய்தும், தியாகிகள் போலத்
தின்பது வைக்கோல் என்பது தத்துவம்.

எருமை

கருமை நிறத்தனவாய்,
கல்மலைபோல் உரத்தனவாய்,
எருமை மாடுகள்தாம்

எங்குந் திரிந்தலையும்,
கழுத்திலே கட்டியதாய்த்
தொங்கவிட்ட சிறப்பைகளோ,
எழுத்திலே வடிக்கவொண்ணா
இன்னிசையின் அலையெழுப்பும்

குளம்

குளக்கரை மரங்கள்
குலுங்கிக் கொட்டிய
மலர்கள் வர்ண
ஆடையாய் மிளிர,
அல்லிப் பூவும்
தாமரைப் பூவும்
அள்ளி முடித்த
கூந்தலில் சூடிய
அழகிய மலர்களாய்,
அலை முந்தானையாய்.

ஆதவன் கதிர்கள்
அலைகளில் பட்டுத்
தெறித்துப் பரக்கும்
ரத்னம் ஆபரணமாய்,
காலைச் சூரியன்
தெற்றிப் பொட்டாய்ச்,
சுமங்கலிக் கோலம்
காட்டிடும் குளங்கள்.

## நாரை

ஓடிவரும் நீரினிலே
உறுமீனைத் தேடியதாய்
ஒற்றைக்கால்த் தவமிருந்து
உடலிளைக்கும் நாரையினம்,
புதிர்க்கணக்கின் விடைகாணப்
புகுந்தவனை ஒத்திருக்கும்.

வக்கடையில் வயல்வெளியில்
வரப்பெல்லாம் நீக்கமறக்
கொக்கெல்லாங் கூடிக்
கொலுவிருக்குங் காட்சிகளோ
திக்கெல்லாங் கவர்ந்திழுக்குந்
தேவர்களை மனம்மயக்கும்.

## கார்த்திகைப் பூ

வார்த்தைகளுக் கெட்டாத
வனப்புடனே வயல்வரம்பில்
கார்த்திகைப்பூப் பூத்திருக்கும்
காளான்கள் முளைத்திருக்கும்,
பார்த்ததனில் நெஞ்சத்தைப்
பறிகொடுத்து மனமகிழ்ந்து
சேர்த்தணைத்துச் சிறுவரெல்லாஞ்
சிந்திசைத்து மகிழ்ந்திடுவர்.

## இலுப்பைப் பூ

அலுப்பேதும் பாராமல்
அதிகாலை எழுந்து,
அங்குள்ள சிறுவரெல்லாம்
அடைந்தொன்றாய்த் திரண்டு,
இலுப்பைப்பூப் பொறுக்கி, அதை
இதமாகப் பிழிந்து
எடுக்கின்ற பாணியதன்
இனிமைக்கு நிகராய்,
எதைச்சொல்ல என்நாக்கு
எப்போதும் ஊறும்.

## வயல்

ஏர்பூட்டி உழவுசெய்து
எழிலாய் வரப்புவெட்டி
கார்பார்த்து நீர்பாய்ச்சிக்
களைபறிக்க, நெல்வயலில்
கரும்பினைப்போல் நெல்வளரும்,
கமுகினைப்போல் நிமிர்ந்துநிற்கும்,
விரும்பிநிற்கும் உழவன்முக
வீறாப்பை என்சொல்வேன்.

## காயும் -கனியும்

புத்துக்கள் மேலே
போட்டுப் படரவிட்ட
வித்துக்கள் வளர்ந்து
விரைந்து அதைமூடி...

வத்தகப் பழங்களாய்,
வெள்ளரிப் பழங்களாய்,
கெக்கரிக் காய்களாய்,
தீன்பிலாக் காய்களாய்
திக்கெல்லாங் காய்த்துத்
திகட்டாச் சுவைதருமே.

காவல்

வெட்டிப் பிரித்து,
வெளியாக்கிச் சமனிட்ட,
புற்றுக்கள் மேலே,
போட்டுவைத்த குடிலினிலே,

தீவறையில் குளிர்காய்ந்து,
சிறாம்பியிலே கிடந்து,
பாவகைகள் பாடிப்,
பன்றிகளைத் துரத்திக்,

காவலுக்கு வந்த,
காளையர்கள் இரவினிலே
கூவிக் குரலெழுப்பும்
குரலோசை வானதிர்க்கும்.

மரக்கிளையில் பறணமைத்து
மதிபார்த்துக் கிடந்துகொண்டு,
வரப்பினிலே எரியவிட்ட
மரக்கட்டை இருளகற்ற,
உரப்பி எழுப்புகின்ற
ஓசையிலே வெருண்டோடும்,

யானையை அடிமரத்தில்
கண்டு சுகங்கேட்கும்
காளைகள் நிறைந்ததின்று
கவிபாடும் வன்னிநகர்.

பொறி

பன்றிக்குப் பொறிவைக்கும்
பொறியியல் ஆளர்கள்
அன்றைக்கு எம்மூரில்
அதிகமாய் இருந்தார்கள்

தென்றல்

ஆற்றங் கரைமரத்தின்
அழகான பூக்களினைக்
காற்று மணம்புரிந்து
கைவீசி நடந்துவரும்

கிராமியம்

புதுவெள்ளம் பாய்ந்துவரப்
புரண்டுவரும் மீனினங்கள்
எதிர்செல்ல மீனடிக்கும்
இளைஞர்களின் மகிழ்ச்சிபொங்கும்

பனிக்காலம் வாய்க்காலில்
பாவையர்கள் அயிரையினைத்
தனிக்கவனத் துடன்வாரித்
தம்சேலை நிறைத்திடுவர்.

கஞ்சிக் கலயத்தைக்
கழுத்துழுக்கச் சுமந்துகொண்டு
பஞ்சியென்றால் என்னவென்றே
பார்த்தறியாப் பாவையர்கள்

நடைவரம்பில் வரப்பார்த்து
நாவினிக்க உடல்சிலிர்க்கக்
கடைவாயில் தேனூறக்
காதலர்கள் பார்ப்பதனால்

வெற்றிலையால் சிவந்திட்ட
வெள்ளுதடு துடிதுடித்துக்
கற்பனையில் மனம்லயிக்கக்
கன்னங்கள் சிவந்திடுமே:

பச்சைப்புல் வெளிகளும்
பரந்தவயற் கழனிகளும்
இச்சைக் குகந்தநல்ல
இனியகனி வகைகளும்

கச்சைக் கட்டோடு
கலப்பையினைத் தோள்சுமக்க
அச்சமின்றி நடந்துவரும்
ஆணழகன் தோற்றமும்,

களைபறிக்கும் காரிகையர்
கையசைவும் கண்ணசைவும்,
விளைவறுக்கும் வீரர்களின்
விரலசைவும் வீறாப்பும்.

அரிவுவெட்டி அங்கெறியும்
அழகும் அவர்பாடும்,
பரிவுமிகு பாடல்களின்
பாவனையும் பாவளமும்.

தென்றலிலே மிதந்துவரும்
தெம்மாங்குப் பாட்டொலியும்
கன்றுகட்டிப் பால்கறக்கக்
கலயத்தில் விழுமொலியும்.

தினைப்புனத்துத் தேவதைகள்
தினையுண்ணும் பறவையினம்
அனைத்தையுமே கலைக்கின்ற
ஆலோலப் பாட்டொலியும்.

கண்முன்னால் நின்று
கவிபாடு என்றுசொல்லி
எண்ணத்தை நிறைத்துவிட
எழுதிவிட்டேன் இக்கவிகள்.

## வவுனியா அரச அதிபரின்

# வாழ்த்துப்பா

மண்ணைப் பார்த்தோம்
மரத்தைப் பார்த்தோம்
எண்ணிப் பார்த்ததில்லை
எம்மூர் வளத்தை:

வளமற்ற காடு வன்னி
என்ற எண்ணம் மாற
வளமுள்ள நாடு வன்னி
தரும் செல்வம் இவை

அத்தனையும் பார்த்திட்ட
நம் அகளங்கனின்
முத்தனைய பாடலிது
வன்னி மைந்தன்

கவிவளமும் கலைவளமும்
மேலும் வளர
புவியெல்லாம் உன்புகழ்
பரவ வாழ்த்துகின்றேன்.

உடுவை எஸ், தில்லைநடராஜா